செ.வெ.எண்.199 நாள்.03.03.2010

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரிலும், மொரிசியஸ் நாட்டு மேதகு துணை குடியரசுத் தலைவர் திரு.ஏ.வி. செட்டியார் அவர்களின் அழைப்பின் பேரிலும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலர் திரு.க.முத்துச்சாமி, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு. ப.ரா. சம்பத் ஆகியோர் அரசுமுறைப் பயணமாக பிப்ரவரி 21 முதல் பிப்ரவரி 28 வரை பயணம் மேற்கொண்டனர்.

அங்கு குடியரசு துணைத் தலைவர் அவர்களை சந்தித்ததோடு மட்டுமல்லாமல், அங்குள்ள தமிழ் கோயில்களின் கூட்டமைப்பு பிரதிநிதிகள், தமிழ் கலாச்சார மையத்தினர், தமிழ் கூட்டமைப்பினர், தமிழ் வர்த்தக அமைப்பினர், மகாத்மா காந்தி கல்வி நிறுவனத்தினர் ஆகியோருடனும் கலந்துரையாடினர். மொரிசியஸ் நாட்டில் 125 திருக்கோயில்கள் உள்ளன. மொரிசியஸ் நாட்டிலுள்ள திருக்கோயில்களை பார்வையிட்டு அந்த கோயில்களின் வளர்ச்சிப் பணிக்கு பல ஆலோசனைகளும் கூறப்பட்டது. மேலும் அவர்களுடன் கலந்துரையாடியபோது **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களுக்கு பல்வேறு கோரிக்கைகளை வைத்து அவற்றை **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று அவர்களுடைய கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

அங்குள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்குப் பயிற்சி வழங்கிடவும், கோயில்களில் உள்ள இசைக் குழுவினருக்கு இசைக் கருவிகள் வேண்டியும், அவற்றை இசைப்பதற்கு இசைக் கலைஞர்கள் வேண்டியும், தமிழ் வழிபாட்டுப் புத்தகங்கள் திருக்கோயில்களில் வைப்பதற்கு தந்து உதவிடவும் கோரியுள்ளனர்.

Y3

அந்நாட்டிலுள்ள தமிழ்ப் பள்ளிகளுக்கு தமிழ் ஆசிரியர்களும், தமிழ் நூல்களும், தமிழ் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வேண்டுமென்றும்,தமிழ் திரைப்படங்களும், தமிழ் கோயில்களுக்கு சிலைகளும் வேண்டுமென்றும், ஆண்டுதோறும் முக்கியமான பிரமுகர் ஒருவர் தமிழ்நாட்டின் சார்பாக மொரிசியஸ் நாட்டிற்கு வந்து அந்நாட்டின் தமிழ் அமைப்புகளோடு கலந்துரையாடி தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்றும் கோரினர். அதே போன்று தமிழ் நாட்டிலிருந்து கலைஞர்கள் வந்து கலை நிகழ்ச்சிகள் நடத்த வேண்டுமென்றும், தமிழ் பாரம்பரிய கலைகளான பரதநாட்டியம், கோலாட்டம், கும்மி போன்ற கலைகளை கற்றுத் தருவதற்கு தகுந்த ஆசிரியர்கள் தேவையென்றும், தமிழ்நாட்டின் நாட்டுப்புறக் கலைகளை காண்பதற்கு சுற்றுலாத்துறை மூலமாகவோ, கலை பண்பாட்டுத் துறை மூலமாகவோ ஏற்பாடுகள் செய்து தருமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மகாத்மா காந்தி கல்வி நிறுவனத்தினர், தமிழ்த் துறை சார்பாக திருவள்ளுவர் சிலை வேண்டும் எனவும், தங்கள் நிறுவனத்திற்கு தமிழ் புத்தகங்கள், நூலகத்திற்கு தமிழ் புத்தகங்கள், சஞ்சிகைகள் தேவையென்றும் கேட்டுக் கொண்டனர்.

திருக்கோயில் கட்டடக்கலை, சிற்பக் கலை, சுதை சிற்பங்கள் ஆகியவற்றை செய்வதற்கு பயிற்சி அளிப்பதற்கு வல்லுனர்கள் அனுப்ப வேண்டும் என்ற கோரிக்கை வைத்தனர்.

தமிழகத்தைச் சேர்ந்த தொழிலதிபர்கள் கொண்ட வர்த்தக கூட்டமைப்பினர் மொரிசியசில் தொழில் தொடங்க முன்வர வேண்டும் என்றும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் தொழில் வர்த்தக குழுக்கள் மொரிசியசுக்கு வருகை தர வேண்டுகோள் விடுத்தனர்.

பல்வேறு தமிழ் அமைப்புகளிடமும், குடியரசு துணைத் தலைவரிடமும் கோவையில் ஜூன் 23 முதல் ஜூன் 27 வரை நடைபெறும் உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டிற்கு மொரிசியசிலிருந்து தமிழ் மக்கள் மிக அதிக அளவில் வர வேண்டுமென்று தமிழ்நாடு முதலமைச்சர் சார்பாக வேண்டுகோள் வைக்கப்பட்டது.

இணை ஆணையர்(திருப்பணி)
ஆணையருக்காக



வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.